உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுரவாதீனத்துப்
பத்தாவது குருமூர்த்தியா யெழுந்தருளியிருந்த
ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள்மீது
சிதம்பரநாத முனிவர் அருளிச்செய்த

# திருப்பதிகமும்

ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள்மீது
அந்தகக்கவி வீரராகவ முதலியாரியற்றிய

## பஞ்சரத்தினமும்.

இஃது

அவ்வாதீனத்து 23-வது மஹாஸந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்
திருவாக்ஞையின்படி

ஸ்ரீகாழி வித்வான்
ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை
அவர்களால்

சென்னை, இம்பீரியல் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1930.

இஃது திருத்தருமபுர ஆதீனத்து 23-வது மஹா ஸந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்களுக்கு உரிமைசெய்யப் பட்டது.

உ

சிவமயம்.

ஸ்ரீபூதேவி துணை.

# நெல்லை அரிக்கிடை போடுதல்.

நல்லரிமேல் அன்னம் நளினை நடைபயிலும்
நெல்லரிவார் நிற்கும் நிலத்து.

பூமியைத் திருத்தி யுண்டலே பிரதானத் தொழிலாக மேற்கொண்டுவரும் நமது புண்ணிய தேசத்தில் பெரும்பாலும் நெற்பயிரைப் பருவத்தே பயிர்செய்து ஏற்றகாலத்தில் அறுவடை செய்துவருகிறோம். அவ்வாறு அறுவடை செய்துவருதலில் சிலகாலத்திற்குமுன் நடத்திவந்ததற்கும் இப்போது நடத்திவருவதற்கும் பெரிதும் வித்தியாசம் காணப்படுகிறது. நெற்பயிர் முற்றியபின் மிகுந்த கவனத்தோடும் தானியம் சிறிதும் சேதப்படாவண்ணம்

அறுத்து அதனை மணியாக்கி நமது களஞ்சியங்களி கொண்டுவந்து சேர்க்கிறோம். இங்ஙனம் சேர்ப்பதி தற்காலம் தானியத்தின் நன்மைப் பயன்களைக் க தாமல் முற்றியதும் முற்றாததும் பதர் சங்காயம் உள்ளதுமான நிலைமையில் தானியத்தைச் சில அறுவடைசெய்கிறார்கள். இதனால் நிலச் சுவான்தா களும் தானியத்தை விலைக்கு வாங்கி உண்பவர்களு பலவாறு கஷ்டமும் நஷ்டமும் அடைகின்றனர். இ விதம் சேர்க்கப்பட்ட தானியம் புழுங்கலு சற்றும் உபயோகப்படாமற்போகிறது. பச்சரிசிக்கு எவ்வாறாகும் என்பதைக் கவனியுங்கள்.

நமது முன்னோரும் சிலகாலத்துக்குமுன்வரை நாமும் நெல்லைக் கலத்துக்கு ஒருமரக்கால் பசுமைய யிருக்கையில் அறுத்துப் பனிகாய்ந்தபின் நெல்லைச் சேகரித்து அரிக்காய்ச்சல் போட்டுத் தானியத்தைக் கொண்டுவந்து பச்சரிசிக்கு உபயோகித்துவந்தோம். இது நிலச் சுவான்தார்களுக்கும் ஏனையோருக்கும் சௌகரியமாகவும் நன்மையாகவும் இருந்துவந்தது. இவ்விஷயம் நிலச் சுவான்தார் யாவரும் நிச்சயமாக

னுபவத்திற் கண்டறிந்த உண்மை. ஆயினும்
ப்போது அவ்வாறு செய்பவர் மிகச் சிலரே.
அன்றியும் கைக் குத்தரிசியானது மில்லில் அரைக்
கப்படும் அரிசியைக்காட்டிலும் எல்லாவிதத்திலும்
மன்மையுள்ளதென்று பல பிரமாணங்களைக்காட்டி
-5-36 ல் என்னால் ஒரு கைப்புத்தகம் வெளியிடப்
டிருக்கிறது. புழுங்கலரிசியைப் போலவே பச்
சரிசியும் கையால் குத்தப்பட்டதானால் பல நன்மை
கள் விளைவிக்கக்கூடியதாகவிருக்குமென்று பல ஜனங்
ளும் நன்கு அறிந்திருக்கிறார்கள். மில் பச்சரிசி
ளவுகடந்து இடிந்துபோவதால் அளவற்ற ஜனங்
ள் அதனை வெறுக்கிறார்கள். அதன் நிமித்தம் நெல்
விலைக் குறைவும் அரிசி விலைக் குறைவும் ஏற்படு
ன்றன.

ஆகையால் தொன்றுதொட்டு நாம் அனுசரித்து
ந்த வழக்கம் போலவே கிருஷிகர் யாவரும் மேற்
ண்டவாறு நெல்லைப் பனிக்காய்ச்சல் அரிக்கிடையிற்
போட்டு கையினாலேயே குத்தி நேர்த்தியான பச்
சரிசியாக்கி உபயோகித்துக் கொள்வார்களாக. இவற்

ருல் தானியம் சேதப்படாமல் விலை உயர்ந்து அறி
உபரிகண்டு சாதம் செம்மையாயும் ருசியாயும் சமைக்
கப்பட்டு நிலச் சுவான்தார்கள் அனைவருக்கும் ஏனை
யோருக்கும் மிக்க லாபத்தையும் சௌகரியத்தையும்
உண்டாக்கும் என்பது திண்ணம்.

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ் காண்ப
ரலகுடை நீழ லவர்.

ஏரினு நன்று லெருவிடேதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.

பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்.
புண்ணிய மிகுத்துப் பொலிகநெல் லரியே.

சீகாழி,
11—11—36. } K. சிதம்பரநாதமுதலியார்.

PRINTED AT THE KUMARAN PRESS, SHIYALI.

உ

குருபாதந் துணை.

திருக்கயிலாயபரம்பரைத்

தருமபுர ஆதீனத்துப் பத்தாவது குருமூர்த்தியாக

வெழுந்தருளியிருந்த

ஸ்ரீலஸ்ரீ. சிவஞானதேசிக சுவாமிகள்மீது

சிதம்பரநாதமுனிவர் அருளிச்செய்த

# திருப்பதிகம்.

பூங்கமல நயனனா னான்முகக் கடவுளாற்
　　புகழ்கொண்ட பழமறை களாற்
　பூமேவு கற்பகப் பொன்னால கையாளும்
　　புரந்தரன் முதற்றே வரால்
ஓங்குமன வாக்குமெய் யாலணுக வரியதா
　　யுருவமோ டுருவ ருவமும்
　உயாரு வமுங்கடந் தடியார்கண் மனவெளி
　　* யிலுதய மாயந்த காரம்

---

* வெளிபா

நீங்கவரு கின்றகு ரியானந் தங்கோடி
நிறைகலா மதிக ளென்ன
நீளும்பிர காசமாய் நின்றகண் டாகார
நித்ய சித்தாகி யெங்குந்
தேங்குபர மானந்த சலதியா நின்னுடைய
திருவடிக ளேசரணம் வாழ்
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிக சம்பந்த குருவே. 1

உன்கருணை வடிவம்வெண் ணீற்றினுத் தூளியு
முயர்ந்தகண் டிகைமா லையும்
ஒருசந்த்ர நிகர்வதன முங்கமல லோசனமு
முறுநன வினுங்கன வினும்
என்கண்ணி னிற்குமிரு பதமுங்க ரத்தினு
லெண்ணிலா மெய்ய டியரை
யின்பவா ரிதிவந் தமுழ்த்திடப் பரிசித்
திருங்க னகமண் டபத்தூண்
மின்குலவு நவரத்ன பீடத்தி லேயாசு
வீற்றிருந் தருளு மழகும்
விழிகுளிர வொருபொழுது கண்டவர்கள் பிறவியெனும்
வேதனையில் வீழ்வார் களோ

தென்கலையி னுண்மை யெல்லாந் தெரிந்திடத்
திருவாய் மலர்ந்த குருவே
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிக சம்பந்த குருவே. 2

...ன்னரும் பார்வையி னகப்பட்ட பேர்சற்று
முள்ளங் கலங்கு வாரோ
வறுமிணியி னோவரோ பசியினான் மெலிவரோ
வுலக ரொடுகூடு வாரோ
மின்னிடை மடந்தையர்கள் கண்ணியி லகப்பட்டு
வீழ்வ ரோமேதி னியிலே
மீண்டும்பி றப்பரோ நரகிற்கி டப்பரோ
விண் ணுலக மெய்து வாரோ
தன்னிக ரிலாதமெய் கண்டதே வன்முதற்
சற்குர வர்தருநூல் களுஞ்
சம்பந்தர் கவிதையும் வாகீசர் பாடலுஞ்
சம்பிரான் றேழர் கவியும்
தென்னிவன்பி ரமரா யன்றுதியும் வளர்மெய்த்
திருவுரு வெடுத்த குருவே
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிக் சம்பந்த குருவே. 3

கடமகுட ராசரும் புடவிக விராசருஞ்
சடில முடிரா ஜரான
சரியைகிரி யாயோக ஞானபா கருமிஃது
சமயமெ னவந்து பிறவிக்
கடல்கடந் துன்னருட் கரையேற வையென்று
கைகூப்பி நிற்கு நித்ய
கல்யாண மானநின் சன்னிதியை யனுதினங்
கண்டுகண் டுள்ளுரு கிமெய்
விடவிடென வேநடுக் குற்றுமொழி குளறநீர் *
விழிபொழி யவானந் தமாம்
வெள்ளத்துண் மூழ்காம லருமந்த நாளெலாம்
வீணே கழித்து விட்டேன்
திடமாக வினியாகி லுந்தா னதற்குட்
டிளைக்கக் கடைக்க ணேக்காய்
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிக சம்பந்த குருவே. 4

வெண்டாள மலியும்ப யோததியி லாயிரம்
விரிபணு முடியுர கன்மேல்
விண்டுவும் பிரமனும் பன்றியும் புள்ளுமாய்
மேதினி பிளந்தி ழிந்தும்

---

* பாடபேதம்

அண்டமுக டுங்கிழி யவேபறந் துங்காண
வரிதான வொருசோ திநீ
படியர்கண மும்மலந் துட்படுத் தும்பொருட்
டம்புவியு ளோர்போ லவே
மண்டலந் தன்னில்வந் ததுகண்ட வுடனங்கு
மருவியுய் யாமலந் நாண்
மட்டுமப் ரபஞ்சத்தி னுற்றலையு மென்போல
வன்கண் ணனெங்க னுண்டோ
தெண்டிரையெ னுங்கரங் கொண்டுப ணிலங்களைத்
திண்கரையி லெறிவா விசூழ்
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிக சம்பந்த குருவே. 5

வேதனெனு மொருகடவு ளெண்டிசைக் கதிபதிகள்
வெற்றிபு னைசக்ரா யுதன்
மேலுலகி லிந்திராதி கடவுளர்கள் வாழ்வையும்
வேண்டா துநாயே னுளம்
பூதமுத னாதாந்த மானவொரு பகலையும்
பொங்குமா ணவவிரு ளையும்
புணர்ந்துபு ணராமனின் றோரகண் டாகார
பூரணா னந்தமா முன்

பாதமக லாதவடி யார்களடி யார்திருப்
பாதங்கள் காட்டு கின்ற
பணிவிடைகள் செய்துகொண் டவருண் டெறிந்திடும்
பரிகலச் சேட முண்டு
தீதகன் றிங்ஙனே யிறுமாந் திருக்குமொரு
செல்வத்தை வேண்டி நின்றேன்
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிக சம்பந்த குருவே. 16

தரைமடந் தையர்கள்பொன் னுசையெனு மூக்கிற்ப
சண்டவா யுச்சுழற் றிச்
சாடக் கறங்கோலை போலச்சு ழன்றுவரு
தமியே னுளத்தை யிங்கோர்
உரையினு னன்முகப் பிரமன்முத லோர்வாழ்வு
மோடிந்த்ர சால மென்றே
யுதறியுன் பெருவடிவை நனவினுங் கனவினு
முன்னிக் கிடக்க வைத்தாய்
அரகரவி தென்னவற் புதமுலகி லிப்படிக்
கியாருனைப் போலிருப் பா
ராலமர நீழலி னிருந்தகுரு நாதனே
யம்புலியு மானு மழுவுஞ்

சிரமருவு கங்கையை மறைத்தடிய வர்க்காகச்
செழும்புவி யில்வந்த குருவே
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிக சம்பந்த குருவே. 7

ஆதவன் பேரொளியை யணுகின லங்கிருளை
யணுகாம னின்ற வதுபோ
லன்றுமுத லின்றுவரை யொன்றையும் பாராத
வடியே னகத்து நயனப்
பூதமுத னாதமீ றாகவரு தநுகரண
புவனபோ கங்க ளான
பொய்மாயை யிருளையணு காமனிர் மலநித்ய
பூரண சலமாகியே
நீதங்கு கின்றவரு ளானந்த வொளிகண்டு
நிற்குநா ளெந்த நாளோ
நீலகண் டாசந்த்ர சேகர சபாநாத
நெடியகயி லாச நாத
தீதகல் வொளிவீசும் ரத்னசிங் காசனத்
தியாககா திராச குருவே
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிக சம்பந்த குருவே. 8

மொழிவதுன் னுமங்கள் கேட்பதுன் கீர்த்திகள்
முடிமிசையி லணிவதுன் ருண்
முண்டகப் போதுமுப் போதுங்கு டிப்பதுன்
முண்டகத் தாள்வி ளக்கிப்
பொழியுநீர் மெய்யினிற் பூசுவது நீற்றினைப்
பூண்பதுன தக்க மாலே
புசிப்பதுன் பரிகலச் சேடநீர் மலர்கொண்டு
பூசிப்ப துன்னடி யிணை
விழிகொண்டு காண்பதுன் வடிவுவலம் வருவதுன்
மிளிர்தரு மைமதுரை யாரூர்
மேவும்பெ ருந்திரும டத்தையுன் னடியனேன்
விரித்துடுப் பதுமாத் திரஞ்
செழுமையில் லாதபிறர் கலைசிறப் பல்லவுன்
செங்கலைக ளாக வைப்பாய்
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிக சம்பந்த குருவே. 9

கற்றும னம்போலு ளங்கரைந் துன்னையே
காணும்ப டிக்கென் னையாள்
கயிலாச கிரிபரம் பரையாகவந் திடுமெய்
கண்டனுயர் சம்ப்ர தாயஞ்

சற்றுமே தவறுவா ராமலருள் வாழ்கமலை
சாருஞா னப்ர காசர்
தனிஞான சம்பந்த ரானந்த பரவசர்
சச்சிதா னந்த ரடியார்
பற்றறுத் திடுமாசி லாமணியர் ஞானசம்
பந்தர்பின் றிருஞான சம்
பந்தர்திரு வம்பலவர் காசியிம சேதுமுற்
பணிகின்ற வழகிய திருச்
சிற்றம் பலவர்திரு நாவினுக் கரசுதே
சிகர்பதம் போற்றி நிற்குந்
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிக சம்பந்த குருவே. 10

சம்பந்த சரணால யன்பெரும் பாடலுந்
தமிழா கரன்பாட லுந்
தண்டமிழ்க் கவிவீர ராகவன் பாடலுந்
தருகுமர குருபர னெனுங்
கும்பமுனி பாடலு நிரம்பவழ கியபுலவர்
கொண்டாட வருபாட லுங்
குலவும் படிக்காசுத் தம்பிரான் பாடலுங்
கோடியடி யார்பாட லுங்

கெம்பீர ஞானவா னந்தமுற வடியர்மேற்
கிருபா கடாக்ஷம் வைத்துக்
கிளர்மணித் தவிசினிற் கொலுவீற் றிருந்துநீ
கேட்குமப் பொழுதி லடியேன்
செம்பாக மில்லாத புன்கவி தைதகூடத்
திருச்செவிச் சாத்தி யருள்வாய்
திருமங்கை யுறைமகலை நகர்தங்கு சிவஞான
தேசிகசம் பந்த குருவே. 11

ஞானசம்பந்தகுரவர் திருவடி வாழ்க
திருப்பதிகம் முற்றிற்று.

---

குறிப்பு:—இச் சிதம்பரநாத முனிவர் திருப்பதிகமும், குருராயமாலை அல்லது குருதோத்திரமும், நித்யகன்மநெறி யென்ற நூலும் இவர் செய்தது. இவர் சரித்திர விவரம் அந்நூல் முகவுரையிற் காண்க.

உ

குருபாதந்துணை

ஸ்ரீலஸ்ரீ, அழகியதிருச்சிற்றம்பல தேசிக
சுவாமிகள்மீது

## அந்தகக்கவி வீரராகவ முதலியார்

இயற்றிய

# பஞ்சரத்தினம்.

---

ஐவரிழுத் தலைப்பவுளந் தடுமாறி விடுமாறென்
றறிகி லேனுக்
குய்யும்வகை யுளதோநின் றிருவுளஞ்சற் றிரங்கியரு
ளுதவா தென்னே
பெய்கருணை வாரிதியே சிவானந்தப் பெருக்காறே
பெருக்கா ஞானச்
சைவவழு கியதிருச்சிற் றம்பலசம் பந்தபுகழ்த்
தருமை வாழ்வே. 1

நாமமெனுங் கடற்பிறவி கடப்பதற்குச் சிவானந்த
நாலை பூத்த
வாமமலர்ப் பதப்புணையை யளிப்பதற்குன் றிருவுளத்தின்
மகிழ்வாய் கொல்லோ

வேமவருண் மயமாகி யடியருளத் தேவெளிவந்
　　தெமையாள் கொன்றைத்
தாமவழ கியதிருச்சிற் றம்பலசம் பந்தபுகழ்த்
　　தருமை வாழ்வே. 2

வானகமண் ணகம்புரக்கும் பொய்வாழ்வை மெய்வாழ்வ
　　மதியா தின்பத்
தேனவிலுந் துணைமலர்த்தா ணிழற்பொலிமெய் வாழ்வினி
　　திளைப்பேன் கொல்லோ
வீனமிகும் பிறப்பொடிறப் பொழியவடி யார்க்கிரங்
　　யீந்த ஞானத்
தானவழ கியதிருச்சிற் றம்பலசம் பந்தபுகழ்த்
　　தருமை வாழ்வே.

எஞ்சலிலா வடியர்பொருட் டாகவே யிவ்வுருவ
　　மெடுத்து வந்தும்
வஞ்சகனென் னிருணீங்க வகமகிழ்ந்து னருட்பார்வை
　　வழங்கா தென்னே
யஞ்சுகநற் குயில்பூவை யரவெலிபோத் தவைக்குமரு
　　ளளிக்கும் வேந்தே
தஞ்சமழ கியதிருச்சிற் றம்பலசம் பந்தபுகழ்த்
　　தருமை வாழ்வே. 4

அகாவுயி ரக்கரங்கட் காணுப்போ லாருயிர்கட்
காகி யாரூர்
நகாமிசை வருஞான சம்பந்த தேசிகனே
காயி னேன்றன்
சிகாமிசை யுனதுகா முறவிருத்தி மகாமறச்
செய்தல் வேண்டும்
கருமழ கியதிருச்சிற் றம்பலசம் பந்தபுகழ்த்
தருமை வாழ்வே. 5

களுவிலை கைச்சேர்ந்த விரும்புபொன்னு மதுபோல
வெழிலா ராரூர்
ரதனீழ கியதிருச்சிற் றம்பலசம் பந்தனடி
மலர்சேர்ந் தென்றுஞ்
சரதமினி யழியாத பேரின்ப வீடடைவாய்
னரே னெஞ்சே
காதலங் கண் டலைமெய்வா யவனடிக்கே தொண்டுசெயக்
கருது வாயே. 6

பஞ்சரத்தினம் முற்றிற்று.

குறிப்பு :—அந்தகக்கவி வீரராகவ முதலியா திருவாரூருலா முதலிய சிறந்த நூல்களை யியற யருளிய பெரியோர். இவரது சரித்திரம் யாவ கும் விளங்குவ தாகலின் இங்குக் காட்டப்பட வில்லை.

The Imperial Printing Works, 23, Davidson St., Madras